# Deposition of Witness
## In the court of the  Additional Subordinate Judge, Tenkasi.
O.S 390 of 2018

.வா.சா.3  மாரியம்மாள்

| | | |
|---|---|---|
| Name | : | மாரியம்மாள் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 12.11.2024 |

சாட்சி அழைக்கப்பட்டு  சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு  முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான்  இந்த வழக்கில் 3ம்நபர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன்.  அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள்தாக்கல் இல்லை)

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் ராமலட்சுமி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.  நீதிமன்றத்தில் என்ன விபரம் சொல்ல வேண்டும் என ராமலட்சுமி சொல்லிகொடுத்தாரா என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்த விபரத்தை கூறுவதற்காக வந்துள்ளேன்.  என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரம் எனக்கு யார் சொல்லி தெரியும் என்றால் என் அத்தை பாப்பாத்தியம்மாள் சொல்லி தெரியும்.  எனக்கு திருமணமாகி சுமார் 25வருடம் ஆகிறது.  திருமணத்திற்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூரில் வசித்து வந்தேன்.  வாதி, பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் கிடையாது என்றால் சரிதான். என்ன சர்வே நம்பருக்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே நம்பர் 571/11 ஆகும். சர்வே நம்பர் 571/12ல் பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கு அடுத்த கிழக்குபக்கம் 571/13 எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். சர்வே

எண் 571/13 இடம் என் கணவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வேஎண்.571/13 இடம் சம்பந்தமாக என் கணவருக்கும், இந்த வழக்கு 2ம்பிரதிவாதிக்கும் இடையே செங்கோட்டை நீதிமன்றத்தில் அவ.எண்.38/24 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் உள்ள நிலம் சம்பந்தமான பகையை மனதில் வைத்துகொண்டு வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் குடும்ப விபரம் முழுவதும் எனக்கு தெரியுமா என்றால் வாதிகளின் மாமனாருக்கு பின்னிட்ட விபரம் தெரியும். அதற்கு முந்தைய விபரம் என் மாமியார் சொல்லி எனக்கு தெரியும். என் மாமியார் தற்போது உயிருடன் இல்லை. சர்வேஎண்.571/13க்கு கிழக்கே உள்ள சர்வே எண் 571/14க்கு பாத்தியப்பட்டது யார் இடம் என்றால் சுப்பையா நாயுடு என்ற போத்தி என்பவரின் மகன் நயினார் தற்போது குடியிருந்து வருகிறார். வழக்கு சொத்து மொத்த எத்தனை செண்டு விஸ்தீரணம் என்றால் 3 செண்ட் ஆகும். வழக்கு சொத்தை நான் அளந்து பார்த்து கிடையாது என்றால் சரிதான். 3செண்ட் என சொல்லி தெரியும். உயில் எந்த வருடம் யார் முன்பு பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலின் அசல் ஆவணத்தை நான் பார்த்து கிடையாது என்றால் சரிதான். பிள்ளைகள் கூறி எனக்கு தெரியும். உயில் எழுதி சுமார் 20வருடம் இருக்கும். பிரதிவாதிகளின் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எத்தனைவருடமாக பேச்சுவார்த்தை கிடையாது என்றால் 7,8 வருடத்திற்கு மேல் இருக்கும். என் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் 8வருடத்திற்கு முன்பு பிரதிவாதிகள் குடும்பத்தில் நடைபெற்ற பாக விடுதலை எனக்கு தெரியும் என்று சொல்லியுள்ள நிலையில் நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. சொல்லி கேட்டுள்ளேன். பிரதிவாதிகளின் குடும்பத்தில் நடைபெற்ற பாக பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் பொது முடுக்கு என பொய்யாக கூறி பத்திரம் போட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். அதனால் எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் ஒருபகுதியை பிரதிவாதிகளிடமிருந்து வாதி கிரையம் பெற்றார் என்றால் சர்வே நம்பரை திருத்தம் செய்வதற்காக பத்திரம் போடப்பட்டது. கிரைய ஆவணம் பிறப்பிக்கப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அப்போது நான் உடன் இல்லை என்றால் சரிதான். தபசில் சொத்தின் ஒரு

பகுதியை வாதிகள் கிரையம் பெற்றது போலவே வாதியின் சகோதரர் சங்கரையா நாயுடுவும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அது அவர்கள் சொத்து தான். அவர்கள் சொத்தை அவர்களே கிரையம்பெற வேண்டிய அவசியம் இல்லை. வழக்கு சொத்திற்கு மேல்புறம் உள்ள சொத்தில் சங்கரையா நாயுடு வசித்து வருகிறார் என்றால் சர்வேஎண்.571/11ல் வசித்து வருகிறார். வழக்கு சொத்திற்கு மேல்புறம் சர்வேஎண்.571/10 ல் யார் வசித்து வருகிறார் என்றால் தற்போது ராமசாமி என்பவர் வசித்து வருகிறார். ராமசாமி என்பவர் வாதிகளின் உறவினர் என்றால் எனக்கு தெரியாது. ராமசாமியின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. சங்கரையா நாயுடு தற்போது உயிருடன் தான் உள்ளார் என்றால் சரிதான். தபசில் சொத்தில் அமைந்துள்ள ஊருக்கு நான் வந்து 25வருடம் ஆகிறது என்றாலும் தபசில் சொத்தை வாதிகள் 90ஆண்டுகளாக அனுபவம் செய்து வருவதாக நான் கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. என் நிரூபண வாக்கு மூலத்தில் என் அத்தை கூறிதான் வாதி அனுபவம் செய்து வருகிற விபரம் தெரியும் என நான் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகள் குடும்பத்தில் பாகம் ஏற்பட்டதாக சொல்வது வாய்மொழி பாகமா அல்லது எழுத்து பூர்வமாக ஏற்பட்டதாக என்றால் பாகம் ஏற்பட்ட விபரம் ஓரளவு தான் தெரியும். 2014ம் ஆண்டில் ஒரு பதிவு ஆவணம் போட்டுள்ளார்கள். மேற்படி 2014ம் ஆண்டின் பதிவு ஆவணத்தின் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வாதிகளை மோசடியாக ஏமாற்றி கிரையம் ஆவணம் பிறப்பித்து கொண்டதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.